1122 |12

53

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.]
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. $2\frac{1}{4}$
ஆறுமாத சந்தா	...	ரூ. $1\frac{1}{4}$

தனிப்பிரதி முக்காலணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-26 | கும்பகோணம் விக்ரம-ஸ்ரீ தை-மீ 24உ 1941- ஸ்ரீ பிப்ரவரி-மீ 6உ | ல- 5

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா

உபநயநமின்றி அச்வமேதமா? பழனி ஸன்னதி பஞ்சமரால் அசுத்தமானபின் அர்ச்சகர்களுக்கு வேதாகமம் தேவார பாடசாலை வைக்கப்படுகிறது. வேறு விபரீத செலவு செய்யாமல் இதை செய்ததற்கு ஸந்தோஷம்!!

சிவராத்ரி மூககவி திநமாம்!! சென்னை ஸம்ஸ்கிருத (அகடமி) ஸபை கவிகளது பெருமையை மறக்க விட்டாமல் நினை வூட்டுவது சிறந்த காரியம். பலஜில்லாக்களிலும் இதன் சாகைகள் தோன்றி இத்தகைய தொண்டு செய்தல் அவசியமாம். பலவகையிலும் வடமொழியை இழிவுபடுத்து மிச்சமயம் சுறுசுறுப்பாகவேலை செய்வதவச்யம்.

பரீக்ஷித்து விடுதல் நலம்!! திருவாதி காலேஜில் பிராமண மாணவர் மற்றவருடன் சாப்பிட நிர்ப்பந்திக்கப் படுவது அநியாயம்! அதர்மம்!! அக்ரமம்!!! தலைவர்கள், இந்த தர்மத்தைச் செய்தவர் விருப்பத்திற்கு மாறாக இப்படி செய்தல் தவறென வழக்கு தொடர்ந்து நீதி கிடைக்கா விடில் விடுதல் நலம்!

பட்டிணி பயித்தியம்!!திலகர் பிள்ளை, திருஅண்ணாமலை சாமியார், பாட்ணா குருவார பட்ணி, தூத்துக்குடி பட்ணி, கொச்சியில் ஒருவர் பட்ணியால் இறந்தார்!! காரணம் வெவ்வேறு!! இதற்கெல்லாம் பொறுப்பாளி! பட்ணிகுருவே-? யார்? எல்லோருமறிந்ததே?

கோபத்தின் கொடுமை!! ஸம்ஸார துன்பத்திற்கே காரணம் காமக்குரோதம்!! பிராமணரால்லாதார் கோபம், பிராமணரிடம்! அவர் பாஷைஎன எண்ணி ஸம்ஸ்கிருதத்தினிடம் வேதத்தினிடம். என்? அவர் ஆதரிக்கும் எல்லா வற்றினிடமும் பரவி அரசாங்கத்திற்கும் அதை ஊட்டி விட்டது!

பதப்போறுக்கு சங்கம்! தற்கால ஆங்கில பதங்களைத் தமிழில் கொண்டுவர அரசாங்கம் ஓர் சங்கத்தைத் தோற்றி வைத்திருக்கிறது. அதில் பூர்ணமாக ஸம்ஸ்கிருதந் தெரிந்தவர் இருப்பதாக தெரியவில்லை. ஸைகிளுக்கு துவிசக்ரவண்டி என்பது வடமொழி கலந்தபதம். ஈருருளி என்பது தனித்தனி தமிழ்!

அவசியமே!! தார்மிகயுவர்கள் ஓர் மகாநாடு நடத்துவது மிக அவச்யமே! ஏப்ரலில் ஈஸ்டர் விடுமுறையில் நடத்தலாம். இப்போது முதலே ப்ரதி ஜில்லாவிலும் அச்சங்கம் தோற்றுவைத்து பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்து [illegible] ஆங்கிலத்திலே யுக்தி யுக்தமாக தர்மத்தைக் கூறும் 4, 5, மாணவ உபன்யாஸகர்களைத் தேர்ந்தெடுத்தல் மிகமிக அவச்யம்! பிரசாரம் முதல் காரியம். அபிராமண மாணவரை அதிகம் சேர்த்தல் மிக நலம். சென்னை காஞ்சி கடலூர் சிதம்பரம் தஞ்சை மாயவரம் குடந்தை திருச்சி கோயம் பத்தூர் சேலம் முதலிய விடங்களில் பிரசாரம் செய்க

திருத்துறைபூண்டி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் அனுக்கிரகத்தின்பேரில் இந்தகிராமத்து மகா ஜனங்களால் பிரதி வருஷமும் நடத்தப்பட்டு வருகிற ஸ்ரீ ருதாகல்யாண மகோஸ்த்வமானது வழக்கம்போல் திருக்குளம் ஸ்ரீ ராமமடத்தில் தைமீ 4உ சனி 17—1—41ல் அஷ்டபதி ஸம்பரதாயங்கள் ஆரம்பிக்கப்பட்டு தைமீ 5உ சனி 19—1—41ல் ஸ்ரீ ஆசார்யாள் அனுக்கிரகத்தின் பேரில் பரம மங்களமாக பூர்த்தியானது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பூடாதிபதி ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்களால் அனுக்கிரகித்து அனுப்பப்பட்ட வீபூதி குங்கும சோபான அக்ஷதை பிரஸாதங்களையும் கோவில் ஸன்னிதானதிலிருந்து மேளவாத்தியங்களுடனும் வேத கோஷங்களுடனும் மகாஜனங்களால் ஸ்ரீ ராம மடத்திற்கு கொண்டுவரபட்டது.

பிராமண ஸந்தர்பணம் விசேஷமாகவும் விமர்சையாகவும் நடைபெற்றது. அன்று தினம் இரவு ஆவடையார் கோவில் பிர்மஸ்ரீ ஹரிஹரபாகவதர் அவர்களால் ருக்மாங்கத சரித்திரம் நடத்தப்பட்டதுடன் மறுதினம் திருவாலங்காடு மகா-ா-ாஸ்ரீ சுந்தரேசய்யர் அவர்கள் பிடிலுடன் பிர்மஸ்ரீ ஹரிஹரபாகவதர் அவர்கள் ஜலதரங்க கச்சேரியும் வெகு சிறப்பாக நடந்தது.

டி. வி. கிருஷ்ணசாமி அய்யர்.
வக்கீல்

ஆத்தங்குடி.

விசேஷ அபிஷேகார்ச்சனை

விக்கிரமஸ்ரீ தைமீ 18உ வெள்ளிக்கிழமை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரருக்கு மஹன்யாஸபூர்வமான விசேஷ அபிஷேகமும் இரவில் அம்பாளுக்கு ஸஹஸ்ரநாமார்ச்சனையும் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் வைபவத்தைக் கண்டு களித்தனர்.

அஷ்டபந்தனகும்பாபிஷேகம்.

நாளது தைமீ 28உ திங்கட்கிழமை உதயாதி $7\frac{1}{2}$க்கு மேல் $9\frac{1}{4}$அளவில் பஞ்சமூர்த்திகளின் திருவுலாக்காக்ஷியும் சிறப்பாக நடைபெறும். (ந. கி.)

பிரயோக குலார்மாவளீ,

என்ற ஸாமவேதீய பூர்வாபரப்ரயோகம் பிரும்மஸ்ரீ வித்வன்மணீ, ஸ்வாமி சாஸ்திரிகளின் அழகிய பதிப்பு பிழையற்றது.

விலை 2—8—0 தபால்சிலவு தனி

குடந்தை
ஜனார்தனபிரஸில் கிடைக்கும்.

மாவையும் கண்டபாலையும் போட்டி
குழந்தையின் குடலைக்கெடுக்காதீர்.
தாய்ப் பால்தான்
குழந்தைக்குச் சரியான உணவு.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலை விசேஷமாய்வளர்க்கும்
திவ்ய ரஸாயனம்
விலை ரூ. 2—4—0
(Packing & Postge extra)

Address:—
"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.
ப்ரோப்ரைடர்: V. B. நடராஜசாஸ்திரீ.
ஆயுர்வேதாசார்யா

ஸாங்கவேத சாஸ்திர அத்யயனம்

(ஆத்மவித்யாபூஷணம்)
வி. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

(23—1—41 தொடர்ச்சி)

இவ்விதம் நித்யத்வ ஸித்தியை கவனிக்காமல் இப்போது சிலர் வேதங்களுக்குக் கால வரம்பு உண்டென்று அநித்யத்வத்தை ஸ்தாபிக்கிறார்கள். சிலர் எழுநூறு வருஷங்களுக்கு முன்பு வேதங்கள் உண்டாயின வென்றும் மற்றும் பலர் ஆயிரம் இரண்டாயிரம், எண்ணாயிரம் வருஷங்களை வேதோத்பத்தி எல்லையாகச் சொல்லுகிகிறார்கள். இவர்கள் வேதகால பரீக்ஷை செய்வதானது, குருடர்கள் ரத்ங்பரீக்ஷை செய்வதுபோலிருக்கிறது.

'एषधर्मस्सनातनः'

'वेदचक्षुस्सनातनम्'

என்பதாதிகளால் தர்மமும், வேதமும், நித்யமென்று தெரிகிறது. தற்காலத்தியவர்களின் அநித்யத்வ ஸ்தாபகயுக்தி சரியானதல்ல. சில மகரிஷிகளின் பெயர் இருப்பதை வைத்துக் கொண்டும், பாஷையின் தாரதம்யத்தை அவலம்பித்துக் கொண்டும். கால பரீக்ஷை செய்வது தகுதியல்ல.

சப்தங்களுக்கு புருஷபுத்தி தோஷத்தால் அப்ராமாண்யம் சொல்லலாம். வேத சப்தங்களுச்கு அந்த தோஷமில்லை. ஏனெனின் இவ்வேதம் அபௌருஷேய மல்லவா? புருஷபுத்திக்கலப்பு இவ்வேதங்களுக்கில்லை. ஸர்வக்ஞன பகவானும், இவ் வேதங்களில் பூர்ண ஸ்வாதந்த்ர்யம் அடையவில்லை. முந்தின ஸ்ருஷ்டியில் உள்ளப் பிரகாரமாகவே, இந்த ஸ்ருஷ்டியிலும் அவ் வேதங்களை. பிரும்மதேவருக்கு உபதேசிக்கிறார். வேதங்களின் "இஷேத்வா" என்பது முதலிய ஆனுபூர்வீக்ரமத்தை மாற்றுவதற்கு ஸர்வக்ஞனுக்கும் அதிகாரமில்லை. வேதங்களின் ஆனுபூர்விக்ரமம் மாறும் பக்ஷத்தில் புண்யபாபவ்யவஸ்தைக்கு விப்லவம் ஏற்பட்டுவிடும். கல்பபேதத்தையனுஸரித்து ஆனுபூர்வீ, பேதம் ஒப்புக்கொள்வது தகாது. பூர்வகல்பங்களில் உள்ள க்ரமங்களை யனுஸரித்து பகவான் வேதத்தை வெளியிடுவதால் அவருக்கு ஸ்வாதந்த்ரயம் அற்றுவிடாது. பிரஜைகளின் போக ஸித்திக்காக கர்மாக்களை யனுஸரித்து பிரபஞ்சத்தை முன்போல் ஸிருஷ்டிப்பதுபோல், பகவான் முன்கல்பத்தில் உள்ள புண்யபாபங்களை யனுஸரித்து. இந்த கல்பத்திலும் அவ்வித புண்யபாபங்களை யறிவிக்கின்ற வேதத்தை வெளியிட்டார் என்று சொலவது தான் சரியானது.

ஜகத் ஸ்ருஷ்டியில் பகவானுக்கு ஸ்வாதந்தர்யம் எவ்விதமோ, அவ்விதமே வேத ஸிருஷ்டியிலும் ஸ்வாதந்தர்யமுண்டு. இதனால் ஈச்வரகார்யத்வத்துக்கும், அபௌருஷேய வாதத்துக்கும் விரோதமில்லை. வசந்தம் முதலிய ருதுக்கள் மாறுவதுபோல் கல்பங்களும் அடிக்கடி மாறிமாறிவருகின்றன. அந்தந்த கல்பங்களில் வேதம் ஆவிர்ப்பவிக்கிறது, மறைகிறது. என்பதுதான் வேதங்களைப்பற்றிய வைதிகமதஸித்தாந்த சாரம்.

இத்தகைய வேதத்தை சம்ரக்ஷிப்பதற்காகவே, சிக்ஷை முதலிய ஆறு அங்கங்களும், பதினெட்டு ஸ்தானங்களும் ஏற்பட்டுள்ளன. வேத ரக்ஷணத்திற்காகவே மீமாம்ஸையும் ஏற்பட்டிருக்கிறது. ஜைமினி பகவான் தர்மவிசாரத்தை ப்ரதிக்ஞை செய்துவிட்டு, முதலாவது அத்தியாயத்தால் வேத ஸ்மிருதி புராணாசாராதி ப்ராமாண்யத்தை விரிவாக வர்ணித்திருக்கிறார். வேதத்தில் அப்ராமாண்ய புத்தியும், அவிச்வாசமும், ஜைமினி பகவானுடைய காலத்திலேயே உதித்துவிட்டது. இல்லாவிட்டால வேதப்ரமாண்ய விசாரத்துக்குச் சிறிதும் அவகாசமேற்படாது.

வேதம் ப்ரமாணமா? அப்ரமாணமா? நித்யமா? அநித்யமா? பௌருஷேயமா, அபௌருஷேயமா! என்று விசாரிக்கக்கூடிய நிலைமையில் இருப்பது வருந்தத்தக்கது. ஆசார்ய புருஷர்கள் அனைவரும் வேதத்தை பகவதீ யென்றும், ஆயிரம் மாதா பிதாவுக்கு ஸமானமான தென்றும் சொல்லி கௌரவித் திருக்கிறார்கள். நல்லவளா? கெட்டவளா என்று தன் தாயாரை பற்றி விசாரிப்பதற்குப் புத்திரன் எப்படி அர்ஹதை யடையமாட்டானோ அவ்விதமே வேதமாதாவைப்பற்றி விசாரிப்பகற்கு நம் போன்றவர்களுக்கு அர்ஹதை யில்லை. வேதத்தில் ஒரு அக்ஷரங்கூட தெரியாத நாம் வேதங்களுக்குக் காலசர்ச்சை செய்வது முதலியவற்றல் பிரவிருத்தித்தால் ஸாஹஸமாய் முடியும். பிராமண ப்ரமேயங்களுக்குள் ப்ரமாணம், முந்தினதென்றும், பிரமேயம் பிந்தினதென்றும் சொல்லமுடியுமா? கண் முந்தினது பிறகு ரூபமிருந்த தென்று சொல்வது சரியா? கண்ணிருந்தால் ரூபந் தெரியும். ரூபமிருந்தால் கண் அதை க்ருஹிக்குமென்பது போல் வேதப்ரமாணமிருந்தால், அர்த்தவடிவமான பிரமேயம் பிரபஞ்சம் தோன்றும். ஆகவே இரண்டும் அநாதியானதென்று தீர்மானம். பிரும்மதேவர் வேத சப்தத்தை உச்சரித்துக் கொண்டே பூமி, அந்தரிக்ஷம் முதலிய ப்பிரபஞ்சத்தை யெல்லாம் ஸிருஷ்ட்டித்தார்.

ஆகவே வேதாத்யயனம்தான் நமக்கு இப்போது அவச்யமானது. அவ்வேதத்தை புஸ்தகத்தைப்பார்த்து அத்யயனம் பண்ணக்கூடாது, பண்ணவும் முடியாது, கொஞ்சம் ஸ்வரம் தவறினாலும் வெகு அனர்த்தமாய் விடும். குருமுகமாக அதற்குறிய நியமங்களுடன் அத்யயனம் செய்தால்தான் வீர்யகரமாயிருக்கும் வேதாத்யயனத்திற்கு வெகு நியமங்களுண்டு. வாக் மனம் காயம் சுத்தமாய் இருக்கவேண்டும். அனத்யாய கால தேசங்களில அத்யயனம் செய்வது கூடாது நம முன்னோர்கள் அசுத்தியாவிருக்கும் போது வேத வேதாங்கங்களை நினைக்கக் கூடமாட்டார்கள். பொதுவாய் ஸகல சாஸ்திரங்களையும் அதன் தத்வார்த்தம் விளங்குவதற்காக சுத்தி முதலிய நியமங்களோடு தான் நினைக்கவேண்டும். பாணினி பகவான் வியாகரணத்தைச் செய்ய ஆரம்பிக்கும் போது தர்ப பவித்ரபாணியாய் சுத்தமான இடத்தில் கிழக்கு முகமாய் உட்கார்ந்து கொண்டு யோக சமாதியை அவலம்பித்துக் கொண்டு எழுதியிருப்பதால் எழுதியிருப்பதால் அந்த ஸூத்திரங்களில் ஒரு அக்ஷமரவது அர்த்தமற்றதாகச் சொல்லக்கூடாதென்று மஹாபாஷ்யத்தில் பதஞ்சலி பகவான் சொல்லியிருக்கிறார்.

எப்படியாவது வேதாத்யயனம் தான் நமக்கு எல்லாச்ரேயஸ்ஸையும் தரக்கூடியது அதை வயதுமுதிர்ந்தோருங்கூட கொஞ்சம் கொஞ்சம் உபயுக்தமான பாகத்தையாவது அத்யயனம் செய்தல் நலம். வேதபகவானுடைய உபாஸனை செய்யாமல் மற்றெந்த கார்யமும் வ்யர்த்தமேயாகும். அவருடைய கோபத்திற்கு ஆளாகியிருக்கிறோம். அவர் கோபத்தைப்போக்கி அனுக்ரஹம் பெற்றால் அனைவருக்கும் க்ஷேமமுண்டு. வேதஸமுத்ர ஸ்நாநம் செய்து நமது பாபங்களைப் போக்கிக்கொள்ளுதல் அவச்யம். ஸமுத்திரம் போன்ற இவ்விஷயத்தை நிறுத்துவதற்கு இடம் தெரியாமல் தவிக்கிறேன். இதில் சொல்லவேண்டிய விஷயங்கள் யாவும் சொல்லிமுடியவில்லையாயினும் கிரமமாய் அடுத்த வாரத்திலும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது வேத ஸமுத்திரத்தில் ஒரு நடு த்வீபத்தில் நின்றுகொண்டு ச்ரம பரிஹாரம் செய்துகொள்வோம். இதனை ஆதரவுடன் வாசிக்கக் கோருகிறேன். அனுத்துவிடக்கூடாது.

திப்பிராஜபுரம்

ப்ரும்மவித்யா ஸபா

4—1—41௳ சனிக்கிழமை ப்ரும்மஸ்ரீ வரகூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், மனதின் தத்வமும் அஹம்பதார்த்த ஞானமும், இதற்கு பக்தியினால் ஏற்படக்கூடிய லாபத்தைப்பற்றியும் அழகாக உபன்யஸித்தார்கள். 9—1—41௳ வியாழக்கிழமை ஏகாதசி தினம் டி எஸ் வெங்கிட்டராமய்யரால் ஸ்ரீமடத்தின் அலுவல்கள் முத்திராதிகாரி ஸ்கீமின் நோக்கம் இதுகளைப்பற்றி ஸ்ரீ ஆசார்யாள் செய்திருக்கும்உபன்யாஸத்தையும் ஸ்ரீ குரு நாராயணதீர்த்தருடைய திவ்ய சரித்திரத்தையும், வாசித்துச் சொன்னார்.

11—1—41௳ சனிக்கிழமை ஆடுதுறைப் பெருமாள் கோவில் ப்ரும்மஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா அவர்கள் கோபிகா கீதம் என்னும் விஷயத்தைப்பற்றி வெகு விரிவாக உபன்யஸிதார்.

13—1—41௳ திங்கட்கிழமை கொடிமுடி ப்ரும்மஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள் ஆகார நியமம், ஆசாரம் அனுஷ்டானம் இதுகளைப்பற்றி அழகாக ப்ரசங்கித்தார்.

18—1—41௳ சனிக்கிழமை ஷை யார் சந்தியாவந்தனத்தைப்பற்றியும் ஸ்திரீகளின் தர்மத்தைப்பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னார்கள்.

23—1—41௳ வியாழக்கிழமை ஏகாதசி தினம் டி எஸ் வெங்கிட்டராமய்யர் போதேந்திராளின் சரித்திரத்தையும், க்ஷத்திரிய குலோத்பன்னனான 'குரு நானக்'கின் சரித்திரத்தையும் வாசித்துச் சொன்னார்.

25—1—41௳ சனிக்கிழமை தினம் மதுரை ப்ரும்ம-ஸ்ரீ M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள், உலக ஸ்ருஷ்டியின் விநோதத்தைப்பக்றியும், அதிலிருந்து மனுஷ்யர்களாகிய நாம் தெரிந்துகொள்ள வேண்டியது பல உளதென்றும், புராதன பழக்க வழக்கங்களின் மேன்மை பற்றியும், தற்காலம் காபி முதலியதுகளை வெகுவாகக் கண்டித்தும் நீண்டதோர் உபன்யாஸம் செய்தார்கள். பிறகு லால்குடி ப்ரும்ம-ஸ்ரீ பாடசாலை கனபாடிகள் அவர்கள் போதனா முறையாகவும், தனது இனிய மொழிகளால் வெகு ரஸமாகவும் நமது கடமையை தெளிவுபடுத்திச் சொன்னார்கள். 28-1-41 தேதி செவ்வாய்கிழமை, செங்கல்பட்டு தமிழ் கவிமணி ப்ரும்ம-ஸ்ரீ வசிஷ்ட பாரதி அவர்கள் ஸ்ரீ ராமாயணத்தின் ரகஸ்யங்களை எடுத்துச் சொல்லி, திருவவதாரப் படலத்தின் முக்கிய ஸாரத்தையும் வெகு அழகு படுத்தி உபன்யஸித்தார்கள்.

31—1—41௳ வியாழக்கிழமை, ஷை யார் தனது முதிர்ந்த ஆராய்ச்சியைக் கொண்டு கம்பரின் சரித்திரம், காலம் முதலிய அதிசய உண்மைகளையும், பரத-குஹ சமாகமத்தல் கவி சித்திரித்திருப்பதின் ஒரு பெருமையைப்பற்றியும் நன்கு எடுத்து உபன்யஸித்தார்கள்.

1—2—41 சனிக்கிழமை வரகூர் ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் கலியின் கொடுமையைச் சொல்லி, பாபங்களை நிவர்த்தித்துக் கொள்ள அநேக மார்க்கங்களை எல்லோராலும், அவசியம் அனுஷ்டிக்க வேண்டியதான மாக ஸ்நானத்தின் மஹிமையைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள்.

சட்டக்குறிப்புகள்

விவசாயக் கடன் நிவாரணச்சட்டம்

சென்றவாரப்பத்திரிகையில் ஷை சட்டத் தேதிக்கு முன்னல் கடன்காரர் கடன் தஸ்தாவேஜிப்படிக்குள்ள வட்டித்துகைகளை கொடுத்திருக்கும்பக்ஷத்தில் அவைகள் ஷை சட்டப்படிக்குள்ள வட்டிரேட்டுக்குமேல் உபரியாயிருந்தால் அந்த உபரி பாகங்களை திருப்பிக்கேட்கவாவது அசலுக்கு உளவடைக்கும்படி சொல்லவாவது பாத்தியமில்லை என்றும், வட்டிக்கென்று குறிப்பிட்டு துகைகளை கொடுத்தால் கொடுத்ததுதான் என்றும் தெரிவித்தோம்.

அப்படிக் குறிப்பிட்டு வட்டிக்கென்று கொடுக்காமல் பொதுவாய்க் கடனுக்கென்ரூே அல்லது அசல்வட்டித்துகைக்கென்ரூே கடன்காரர் துகைகளைக் கொடுத்தால் அவைகளை எவ்விதம் உளவடைப்பது என்பதை இப்போது கவனிப்போம்.

நமது ஹைகோர்ட்டாரவர்கள் ஷை இரண்டு சந்தர்ப்பங்களிலும் இந்தச்சட்டம் ஏற்படும் முன்னமேயே கடன்காரராவது கடன் கொடுத்தவர்களாவது அந்தத் துகைகளை குறிப்பிட்டு வட்டிக்காவத முதலுக்காவது உளவடைக்காத பக்ஷத்தில் அந்த துகைகளை (Open payments) களென்றும் சட்டத்தேதிக்கு பிறகு தன் இஷ்டம்போல் முந்தினவட்டிக்கு உளவடைக்க கடன்கொடுத்தவருக்கு பாத்தியமில்லை என்றும் சட்டம் ஏற்பட்ட தேதிக்குப் பிறகு மாத்திரமே ஷை துகைகள் வரவுவந்தால் எவ்விதம் ஷை சட்டப்படி உளவடைக்க வேண்டுமோ அவ்விதமே உளவடைக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு தீர்ப்பு செய்திருக்கிருர்கள். vide 1940 (2) M L J 648 அண்டு 758)

அதாவது உதாகாணமாக A. என்பவன் 1930ஞு ஜனவரிமாதம் 1ம்தேதியில் மாதம் 1க்கு 100க்கு 1 வட்டிவீதம் ரூ 1000 B. என்பவனுக்குக் கடன் கொடுத்தும் அதற்கு B என்பவன் ரூ 1000த்தை A க்கு 1937-ஞு ஜனவரி-மீ 1வ கொடுத்தும் அதை ஷை தஸ்தாவேஜியில் பொதுவாக “இந்த கடனுக்கு” என்ருவது “இதின் அசல் வட்டிக்கு” என்ருவது வரவு வைத்தான் என்று வைத்துகொள்ளுவோம். A B இருவர்களும் இந்தச் சட்டத் தேதி வரையில் ஷை துகையை குறிப்பிட்டு வட்டிக்கு எவ்வளவு என்றும் முதனுக்கு எவ்வளவு என்றும் உளவடைக்காத பக்ஷத்தில் இந்த சட்ட தேதிக்கு முன் ஷை துகை வரவு வந்ததாகவே கருதபடமாட்டாது. இந்நிலைமையில் இச்சட்ட தேதியில் ஷை கடனின் வட்டி ஜாடாயும் ஷை சட்டப்படி ரத்தாகிவிடுமாதலாலும் சட்டத் தேதியில் அசல் துகை மாத்திரம் பாக்கி நிற்குமாதலாலும் வரவு வந்த ஷை துகை 1000 ரூபாயும் அசலுக்கு உளவடைக்கப்பட்டு பூருக் கடனும் தீர்ந்துவிடும். A-க்கு யாதொரு துகையும் B-யிடமிருந்து கிடைக்காது.

1—10—32 தேதிக்குப் பிறகு கொடுக்கப்பட்ட கடனுக இருக்கும் பக்ஷத்தில் அதற்காக பொதுவாக மேற்கண்டவிதமாக துகைகள் வரவு வந்து அவைகளை ஷை சட்டத் தேதி வரையில் உளவடைக்காமல் இருந்தால் பிறகு ஷை சட்டப்படிக்குள்ள வட்டிக்கு மாத்திரம் ஷை துகைகளை உளவடைக்கலாமேயொழிய வரவு வந்த தேதியில் ஷை தஸ்தவேஜிப்படிக்குள்ள வட்டிக்கு உளவடைக்க பாத்தியமில்லை.

கடனுக்காக கொடுக்கும் துகைகளை அப்போதே என்னவிதமாக உளவடைக்கவேண்டுமென்று கடன்காரன் கடன் கொடுத்தவனுக்குத் தெரிவிக்க பாத்தியம் உண்டு. அப்படிச் செய்தால் அவ்விதமே உளவடைக்க கடன் கொடுத்தவன் கட்டுப்படுகிருன்.

அவ்விதம் கடன்காரன் தெரிவிக்காத பக்ஷத்தில் கடன்கொடுத்தவன் தன்இஷ்டம் போல் உளவடைத்துக்கொள்ள பாத்யமுண்டு. ஷை சட்டத்தேதிக்கு முன் ஷை கடனுக்காக தாவா செய்தால் அந்த பிராதில் ஷை வரவு துகைகளை வட்டிக்கென்று குறிப்பிட்டு உளவடைக்கலாம். அவ்விதம் செய்தால் மேலே சொன்ன கஷ்டங்கள் கடன் கொடுத்தவருக்கு ஏற்படாது (vide 1940 (2) M L J 654) அவ்விதம் ஷை இருவர்களும் ஷை சட்டத்தேதி வரையில் செய்யாதபக்ஷத்தில் மேற்கண்டபடி நஷ்டங்கள் கடன் கொடுத்தவருக்கு ஏற்படும்.

(பின் தொடரும்)

கீதோபதேசம் விமர்சம்

(எம். ராமராவ் பி. ஏ. கும்பகோணம்)

சென்ற வருஷ கீதாதினத்தன்று ஆர்ய தர்மத்தில் பிரசுரித்தபடி கீதையின் முதல் அத்தியாயம் விமர்சம் செய்யப்பட்டது. இவ்வருஷம் கீதோப தேசத்தின் விமர்சம் செய்யப் படுகிறது இவ்வுபதேசம் 2 அத்தியாயம் 11 சுலோகத்தில் ஆரம்பித்து 18 அத்தி 66 சுலோகத்தில் முடிவு பெறுகிறது ஆரம்ப சுலோகமான அசோச்யான் அன்வசோசஸ்த்வம் ப்ரக்ஞாவாதாம் ஸ்சபாஷஸே கதாஸூன் அகதாஸூம்ஸ்ச நானுசோசந்தி பண்டிதாஹ!! என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம் அதன் முதல் பாதியின் அர்த்தம் அர்ஜுனு நீதுக்கிக்கத் தகாதவர்களைக் குறித்து துக்கப்படுகிருய் ப்ரக்ஞா வாதங்களையும் பேசுகிருய்; இவ்வர்த்தத்தை அப்படியே வைத்துக் கொண்டால் அஸித்தஸ்ய அனுவாதஹ ஸித்தஸ்ய விதானம் என்று ஏற்படும். துக்கித்தல் அர்ஜுனனுக்கு ஸித்தமாயிருக்கிறது. துக்கிக்கத் தகுந்தவர்களல்லவர் என்பது ஸித்தமாகவில்லை ஸித்தமாயிருந்தால் துக்கித்திருக்கமாட்டான். உபதேசம் என்ருலோ ஸித்தஸ்ய அனுவாதஹ அஸித்தஸ்ய விதானம். தெரிந்ததைக் கொண்டு தெரியாததைப் புகட்டுவதாகும் From the known to the unknown இதற்கு அனுகுணமாக மேற்படி சுலோகத்திற்கு நீ யாரைக்குறித்து துக்கித்தாயோ அவர்கள் துக்கிக்கத்தகுந்தவர்களல்லர் என்ற தாத்பர்யத்தைக் கொள்ள வேண்டும் எப்படி யென்ருல் லோஹிதோஷ்ணீஷாஹ ரித்விஜஹ ப்ரசரந்தி சிவந்த தலைப்பாகைகளை யணிந்திருக்கும் ரித்விக்குகள் கார்யத்தைச் செய்துகொண்டிருக்கிருர்கள் என்ற வாக்யத்தில் விசிஷ்ட விஷயெள விதிநிஷேதௌ விசேஷணம் உபசங்க்ராமதஹ விசேஷணம் விசேஷ்யம் என்ற இரண்டோடு கூடிய விசிஷ்டத்தின் பால் குறிக்கப்படும் விதிவிலக்குகள் விசேஷ்யத்தின்பால் பாதிக்கப்பட்டு விசேஷணத்தையே தழுவும் என்ற நியாயத்தின்படி ரித்விக் பிரசரணமானது வாக்யாந்தரத்தால் ஸித்தமானதால் சிவந்த தலைப்பாகைகளைத் தரித்திருப்பதிலேயே தாத்பர்யம் என்று கூறப்படுகிறது. அதுபோல் அசோச்யகர்மக சோக கர்த்தா துக்கிக்கத்தகாதவர்களைக் குறித்து துககபபட்டாய் என்ருல் துக்கித்தது அனுபவ ஸித்தமானதால் துக்கிக்கத் தகுந்தவர்களல்லர் என்பதிலேயே முக்கிய தாத்பரியமுள்ளதாகும். மேலும் உபசம்ஹார சுலோகமான ஸர்வதர்மான் பரித்யஜ்ய என்ற சுலோகத்தில் மாசுசஹ — துக்கிக்காதே என்று கூறி முடிவுகட்டியிருப்பதால் அதற்கேற்றபடி உபக்ரம சுலோகத்திலும் துக்கிக்கத்தகாதவர்கள் என்று தாத்பர்யம் கொண்டால்தான் அவர்கள் துக்கிக்கத்தகாதவர் ஆகவே நீ துக்கிககாதே என்று உபககிரமம் உபஸம்ஹாரம் இரண்டுக்கும் ஒற்றுமை ஏற்படும்.

மேலே கூறிய நியாயங்களின்படியே யான் த்வம் பாஷஸே தே ப்ரக்ஞாவாதாஹ நீ பேசும் வாதங்களெல்லாம் ப்ரக்ஞாவாதங்களே என்றதாத்பரியத்தையே கொள்ள வேண்டும் ப்ரக்ஞா—வாதான் என்பதற்கு (பிரக்ஞாவதாம் வாதாஹ) புத்திமான்களுடைய வார்த்தைகள் என்றும் பிரக்ஞயா உத்தாஹ வாதாஹ (உன் ஸ்வய) புத்தியால் உண்டான வார்த்தைகள் எனவும்; பிரக்ஞாஞம் அவாதாஹா— புத்திமான்களுககு விருத்தமான வார்த்தை எனவும் மூன்று விதமான அர்த்தம் செய்யலாம். ஆனுல் முதல் அர்த்தத்தை ஏற்றுககொள்ளமுடியாது ஏனெனில் அர்ஜுனன் 1—28 த்ருஷ்ட்வேமம் எனப் பேசியிருககும் வார்த்தைகள் யாவும் புத்திமான்களுடைய வார்த்தைகளாக இல்லை எப்படியென்ருல் துஷ்டநிக்ரஹம் சிஷ்டபரிபாலனம் அதிலும் பகவத்துவேஷிகளையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் நிக்ரஹிப்பது க்ஷத்திரியனுடைய முககிய தர்மம் என்றும் அதைப்பகவானுடைய ஆராதனை ரூபமாகச் செய்யவேண்டும் என்றும் அர்ஜுனன் உணரவில்லை. அப்பேர்ப்பட்ட ஸ்வதர்மத்தை பந்துககளிடமுள்ள சினேகத்தால் அதர்மமென்றும் கருதினுன். புத்திமான்கள் அம்மாதிரி அதர்மமென்று கருதுவார்களா? மேலும் பகவானை கிருஷ்ணனைத் தேரை நிறுத்தும்படி கட்டளையிட்டு என்னுடைய தேர், என்னுல் யாருடன் சண்டை செய்யப்படவேண்டும் நிரீக்ஷயே (1—22) என்ற பதத்தினுலேயே நான் என்ற பதம் ஸித்தமானபோதிலும் மீண்டும் அஹம் நான் என்றும் பேசியிருக்கிருன். அஹங்காரம் மமகாரங்களுடன் புத்திமான்கள் பேசுவார்களா? ஆகவே அர்ஜுனனுடைய வார்த்தைகளிற் சிறிதேனும் புத்திமான்களின் வாதம் இல்லை. தன் சொந்த அறிவைக்கொண்டு கல்பிககப்பட்ட வாதமாயும் வ்ருத்தர்களுககும புத்திமான்களுககும் ஸம்மதமல்லாத வாதமாயும் இருக்கிறது. ஆகவே ஸ்ரீ பாகவதத்தில் பீஷ்மஸ்துதியில் வ்யவஸித பிருதனுமுகம் நிரீக்ஷ்ய ஸ்வஜனவதாத் விமுகஸ்ய தோஷபுத்யா | குமதிம் அஹரத் ஆத்ம வித்யயாயஸ் சரணரதிஹி பரமஸ்ய தஸ்யமே அஸ்து யுத்தம் செய்வதென்ற தீர்மானத்துடன் நிற்கும் சேனையின் முன் அணியில் பீஷ்மர் முதலியோரைக் கண்டமாத்திரத்தில் இவர்களைக்கொல்வதினுல் பாபமென்று பந்துக்களைக் கொல்லாமல் பராமுகமாயிருந்த அர்ஜுனனுடையவிபரீதபுத்தியை ஆத்மவித்யையான கீதோபதேசத்தினுல் போக்கடித்தவனும் ஸர்வோத்தமனுயுமுள்ள ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய பாதகமலங்களில் எனக்கு பக்தி இருக்கட்டும். என்றபடி அர்ஜுனனின் புத்தியானது விபரீதபுத்தி என்று நிந்திக்கப்பட்டிருக்கிறது. விபரீதபுத்தி புத்திமானின் வாதமாகுமா? ஆகையாலும் அவனுடைய வாதம் புத்திமான்களின் வாதமாகாது மேலும் 1-27 சுலோகத்தில் கிருபயாபரயாவிஷ்டஹ— என்பதும் அபரயா – தாழ்ந்த, சாஸ்திர ஸம்மதமல்லாத, கருணையினுல் குடிகொண்டவன் எனவும் அர்த்தம் செய்ய அவகாசம் ஏற்படுகிறது. இம்மாதிரியான விமர்சத்தால் ப்ரக்ஞாவாதாஹ என்ற பதத்திற்கு ஸ்வபுத்தியால் ஏற்பட்ட வார்த்தைகள் அல்லது புத்திமான்களுக்கு விருத்தமான வார்த்தைகள் என்றே அர்த்தம் கொள்ளவேண்டும. ஸ்ரீ மதுஸூதன

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்கவும்.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம- ஹூ தை-மீ 24உ

மஹாஸபை உறுதியளிக்கட்டும்.

திவான்பஹதூர் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் நமது பத்திரிகையில் வெளியிட்டுவரும் சில அபிப்பிராயங்களை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். ஸநாதந தர்ம விஷயத்தில் ஹிந்து மஹாஸபையின் நிலையைப்பற்றியும், தீண்டாமை விஷயமாகத் தமது கொள்கையைப் பற்றியும் ஸ்ரீ சாஸ்திரியார் திட்டமாக சில அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். தீண்டாமை விலக்கு அவச்யமென்பதற்கு அவர் குறிப்பிட்டுள்ள வாதங்கள் புதிதானவையல்ல. ஏழுகோடி ஜனங்களும் அசல் தீண்டாதாராக இருக்க முடியாதென்றும், அவர்கள் சூத்ராதி ஜாதிகளிலிருந்து ப்ரஷ்டர்களாயிருக்கலாமென்றும், அவர்கள் விஷயத்தில் தீண்டாமையை அநுஷ்டிக்க நியாயமில்லையென்றும் ஸ்ரீ சாஸ்திரியார் வாதிக்கிறார்.

சீர்திருத்தவாதிகளிலேயே ஒரு சிலர் இத்தகைய கக்ஷி சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். ஆயினும் இந்த வாதத்திற்கு திட்டமான ஆதாரமென்ன? "விசால மனப் போக்கு"க் கொண்டவர்களுடைய வெறும் ஊஹ மாத்திரமே இந்த வாதமல்லது, இதற்கு சாஸ்திர-சரித்திர ஆதாரம் ஒன்றுமில்லை. ஏழு கோடி தீண்டாதாருள் எவர் பரம்பரை தீண்டாதார், எவர் சூத்ராதி ஜாதியிலிருந்து ப்ரஷ்டர்களான தீண்டாதாரென்பதை ஒருவராலும் நிச்சயித்து சொல்ல முடியாது. ஸ்ரீ சாஸ்திரியார் கக்ஷியின்படி இந்தியாவில் தீண்டாதார் என்ற ஜாதியே கிடையாதென்றல்லவோ ஏற்படுகிறது. தீண்டாதார் இருப்பதாக ஸ்ரீ சாஸ்திரியார் ஒப்புக்கொண்டால் அவர்கள் எவரென்று எப்படி நிர்ணயிப்பது? ஜாதி நிர்ணயத்தில் அந்தந்த ஜாதியாரின் குல தர்மங்களும், பரம்பரை வியவஹாரமுமே முக்ய ஆதாரமாய் நிற்கும். பிராம்மணன் என்று ஒருவனை நிச்சயிப்பதானால் அதற்கு என்ன வழியிருக்கிறது? இப்போது காணப்படும் சண்டாளர்கள், தங்களை சண்டாள ஜாதியினராக பரம்பரையாகச் சொல்லிக்கொண்டும் அந்த ஜாதி தர்மத்தை அவலம்பித்தும்நிற்கிறார்கள். அத்தகையவர்களை "நீங்கள் சண்டாளர்களல்ல அல்ல" என்று வழிபோக்கர் ஒருவர் எப்படி நிச்சயித்துக் கூறுவது? சண்டாளர் விஷயமாக ஸ்ரீ சாஸ்திரியார் கூறும், வாதத்தை பிராம்மணாதி ஸகல ஜாதிகளுக்கும் சொல்லி அந்தந்த ஜாதியை மறுக்கலாம். இம்மாதிரி விஷயங்களில் ஆப்த வாக்யமும் பரம்பரா ப்ரஸித்தியுமே ப்ரமாணமாகும்.

தீண்டாதார் கிரிஸ்தவராகப் போய்விடாமல் தடுக்கவும் தீண்டாமை விலக்கு அவச்யமென்கிறார் ஸ்ரீ சாஸ்திரியார். இதுவும் பழைய வாதமேயாகும். ஹிந்து ஸமூகத்தில் தீண்டாமை இருப்பதின் காரணமாகவே தீண்டாதார் பிற மதம் போய்விட்டார்களென்ற கதையை புத்திமானான ஸ்ரீ சாஸ்திரியார் ஒப்புக்கொள்கிறாரா? லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள், அதிலும் ஏழைகள் பிற மதம் புகுந்ததற்கு உண்மையான காரணம் வேறல்லவா? படித்தவர்களும் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களுமான பல ஹிந்துக்கள் கிறிஸ்தவராகியிருக்கவில்லையா? அதற்குக் காரணம் என்ன?

தீண்டாமை விலக்குக்கு சாஸ்திர ஆதாரமுள்ளதாவென்பதை மட்டுமே சாஸ்திரவச்யர்களான ஸநாதநிகள் கவனிக்க வேண்டியவர்களாவார்கள். ஒருவர் அல்லது ஒரு ஸமூஹத்திற்கு சிரமமுண்டாகிறதென்பதின் காரணமாக தர்மத்தை திரஸ்கரிக்க முயலுவது நியாயமாகாது. அப்படியானால் உலகத்தில் எந்த லௌகிகச் சட்டமோ, மதச் சட்டமோ நிலைத்திருக்க முடியாமல் தேசக்ஷோபம் ஏற்படும். சட்டமோ, சாஸ்திரமோ ப்ரஜைகளை ஒரு வரையறைக்குட்படுத்தி நிர்ப்பந்திக்கும் தன்மை வாய்ந்ததாகவே இருக்கும். அதைத் தளர்த்திவிட்டு விட்டால் வியவஸ்தை நிலைத்திராது. தீண்டாதார் பிற மதம் புகுவதைத் தடுக்கப்பல வழிகளுண்டு. இந்தியாவில் எந்த மதத்தினரும் மத மாற்ற வேலை செய்யக்கூடாதென்று சட்ட மூலமான ஓர் பாதுகாப்பு ஏற்படும்படி ஸ்ரீசாஸ்திரியார் போன்றவர்கள் முயற்சிக்கக்கூடாதா? எடுத்ததற்கெல்லாம் சட்டம் செய்கையில் இந்த முக்ய விஷயத்திற்கு ஏன் செய்யக்கூடாது?

ஸ்ரீ சாஸ்திரியார் போன்ற விசால மனதுபடைத்தவர்கள் தங்கள் மனச்சாக்ஷிப்படி ஒன்றை நிச்சயித்துக்கொள்ள உரிமை பெற்றவர்களே. அதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. ஆயினும் ஸ்ரீ சாஸ்திரியாரின் அபிப்பிராயத்தை ஏற்காதவர்களும், இப்போதுள்ளபடி சாஸ்திர சிஷ்டார வழியில் உறுதியுள்ளவர்களுமான கோடிக்கணக்கான ஸநாதந தர்மிகள் தேசத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மதாசார ஸம்பிரதாயப்படி நடந்து கொள்ள உரிமையுண்டா, இல்லையாவென்பதே இப்போது கேள்வி; காங்கிரஸானது தனது இஷ்டப்படி, அதாவது தாம் வகுத்துக் கொடுக்கும் வழிப்படியே ஸநாதநிகள் நடக்க வேண்டும், இல்லையேல் தண்டனைதானென்கிறது. பெரிய ஸ்தாபனமாகிய ஹிந்து மஹா ஸபையும் இவ்விஷயத்தில் காங்கிரஸையே பின்பற்றப் போகிறதா, அல்லது அந்தந்த வகுப்பாரின் மதாசாரஉரிமையைக் காப்பாற்றிக் கொடுக்கப்போகிறதாவென்பதையே ஸநாதநிகள் அறிய விரும்புகிறார்கள்.

இவ்விஷயமாக ஸ்ரீ சாஸ்திரியார் சென்ற வாரம் ஆர்யதர்மத்தில் குறிப்பிட்டிருப்பது சிறிது ஆறுதலைக்கொடுக்கக் கூடியதே. காங்கிரஸின் ஆலயப்ரவேசச்சட்டத்தை ஸ்ரீ சாஸ்திரியார் கண்டிப்பதுடன், ஆசார சீர்திருத்தமானது சமூஹத்தில் தானாக விரும்பி ஏற்படக்கூடியதேயல்லது சட்ட பலாத்காரத்தினால் உண்டாகக்கூடியதல்லவென்று சொல்லியிருக்கிறார். மஹாசபையின் பிரதான கார்யதரிசியான டாக்டர் நாயுடுவும் மதுரையில் இரண்டு தினங்களுக்கு முன் பேசியிருப்பதில் சநாதனிகளின் பழக்க வழக்கங்களுக்கு ஹிந்துமஹாசபை தீங்கு ஒன்றும் செய்யாதென்றும் சநாதனிகள் மஹாசபை கார்யங்களுக்கு குறுக்காக நிற்கவேண்டாமென்று கூறியிருக்கிறார்.

இவ்விரு கனவான்களும் கூறியிருப்பதிலிருந்து அவர்கள் சநாதநிகள் விஷயத்தில் நல்ல எண்ணமுள்ளவர்களாயும், கெடுதல் செய்யக்கூடாதென்ற உறுதியுள்ளவர்களென்றும் தெரிகிறது.

இது நிச்சயமானால் இவ்விருவரும் சேர்ந்து, மஹாசபையின் மற்ற தலைவர்களுடனும் கலந்து கார்யக்கமிட்டியிலோ, பொதுசபையிலோ சநாதநிகளுக்கு ஓர் உறுதிமொழி கொடுத்துத் தீர்மான மூலமாக இதை வெளிப்படுத்தலாம். அப்படிச் செய்தால் சநாதநிகள் தங்கள் கொள்கைக்கு விரோதமற்ற வழியில் மஹாசபையுடன் நெருங்கிப்பழகி அதன் ஹிந்துஸமூக முன்னேற்றக் காரியங்களுக்கு ஆதாவளிக்க அவகாசமேற்படும.

ஸ்ரீசாஸ்திரியாரோ வேறு மஹாசபைபிரமுகரோ சொந்தஹோதாவில் எதைச்சொன்னாலும் அது நமக்கு பிரயோஜனமுள்ளதாயிராது. ஆதலால் உண்மையான ஒற்றுணர்ச்சி எண்ணமிருந்தால் மேற்கண்டவாறு உத்யோக தோரணையில் தீர்மானம் செய்யும்படி ஸ்ரீ சாஸ்திரியார் மஹாசபையை வற்புறுத்தட்டும்.

குறிப்பு

ஜப்பானின் பிரஜா விருத்தி முயற்சி

ஜப்பான்தேசமானது தனதுஜனஸங்க்யையைக் கூடியசீக்கிரம் 10 கோடியாக விருத்திசெய்து கொள்ளுவதற்காகப் பெரிய திட்டமொன்றைப் போட்டிருக்கிறது.

முக்கியமாக இவ்விஷயத்திற்கு பால்ய விவாஹ முறையை அதிகம் கையாள வேண்டுமென்று அத்தேசம் உத்தேசம் செய்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இது இந்தியச் சீர்திருத்த வாதிகளின் குதர்க்கத்தில் இடி விழுந்தால்போலிருக்கும். பிரஜா விருத்திக்கும், பால்ய விவாஹத்திற்கும் நெருங்கிய சம்பந்த மிருப்பதை ஜப்பானிய விக்ஞான சாஸ்திரிகள் இன்று உணர்ந்தபோதிலும் பலதலைமுறைக்குன்முன்பே நமது மதமும், பெரியோர்களும் இதை வெளியிட்டிருக்கிறார்கள் பிரஜாவிருத்தியை புனிதமான ஓர் மததர்மமாகவல்லவோ நமது சாஸ்திரம் கட்டளையிடுகிறது? இன்று வெவ்வேறுதேசங்களும் பிரஜைகளில்லாமல் தவிக்கையில் பாரத தேசத்தில் மட்டும் எங்கும் காணக்கூடாத ஜன ஸங்க்யையைப் பார்க்கிறோம். ஐந்து குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு ஜப்பான் சர்க்கார் பண உதவி செய்வார்களாம். பிரம்மச்சாரிகளாக யிருப்பவர்களுக்கு அதாவது விவாஹமின்றி யிருப்பவர்களுக்கு அதிக வரி விதிக்கவும் முடிவு செய்திருக்கிறார்களாம்.

இந்தியாவில் கர்ப்பத்தடை இயக்கத்தில் ஈடுபட்டு நிற்கும் சில ஸ்திரீ-புருஷ குதர்க்கிகளுக்கு இது ஒரு எச்சரிக்கையான நற்புத்தி போதிப்பதாகும்.

கல்கத்தாவில்

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹாநாடு

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹாநாடு கல்கத்தாவில் 8—9 தேதிகளில் நடைபெறுமென்றும் மூன்று தினங்களில் ஓர் விஷ்ணுயாகம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், மதுரை ராவ்சாஹிப் பிரம்மஸ்ரீ என் நடேசய்யரவர்கள் ஷை மஹாநாட்டில் தலைமை வஹிப்பாரென்றும் உபசரணைக்கமிட்டியார் அறிவிக்கிறார்கள்.

வித்யையின் மஹிமை

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியாளவர்களின் உபதேசம்.

கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், 22—1—41 புதன்கிழமை இரவு ஸ்ரீ ஆசார்யாளால் செய்ய பிரஸங்கத்தின் ஸாரமாவது:—

(30—1—41 தொடர்ச்சி)

இந்தக் காலத்தில் பள்ளிக்கூடப்படிப்பு பலவிதமாய் கெட்ட பலன்களை கொடுத்திருப்பதாய்ச் சொன்னேம். ஐரோப்பிய தேசங்கள் படிப்பினுல் வெகு உன்னத நிலையை அடைந்திருப்பதாகச் சொல்லுகிருர்கள். அங்கேயும் படிப்பின் பயனுக ஆசையும் குரோதமும் விருத்தியாயிருக்கின்றன. அங்கே சாமான்கள் உற்பத்தி பண்ணவேண்டும், விற்கவேண்டும், பணம் சேர்க்க வேண்டும் என்ற ஆசை அளவுக்குமிஞ்சி பரவியிருக்கிறது. இதனுல் பிறர் நாடுகளைப்பிடிக்க முயற்சி. இதனுல் அடிக்கடி யுத்தம். அந்த தேசங்களில் படிப்பும் ஸைன்ஸும் விருத்தியானதின் மூலம் நிலம், கடல், ஆகாசம் எல்லா இடத்திலும் மனிதனை மனிதன் கொல்ல விதம்விதமாக யந்திரங்களும் கப்பல்களும் கண்டுபிடித்திருக்கிருர்கள். அங்கேயும் படிப்பினுல் மனுஷ்யர்களுக்கு அமைதியும் க்ஷேமமும் உண்டாகவில்லை.

வித்யை என்ற விருக்ஷம் இப்போதுபோல் அல்லாமல், முன் காலத்தில் மதுரமான பழங்களை கொடுத்ததா?

முன்காலத்தில் தேசத்தில் வித்யாப்யாசம் உன்னத நிலைமையில் இருந்தபோது பெரிய க்ஷேமம் இருந்ததாக தெரிகிறது. காவேரி சங்கமத்துக்கு மேற்கே 100மைல் வரையில் உள்ள ப்ரதேசம் பழயகாலங்களில் ரொம்பவும் வித்யைகளில் சிறந்திருந்ததாக தெரிகிறது. இரண்டு வெள்ளாறுகளுக்கும் இடையில் உள்ள நாட்டுக்கு அப்போது சோழநாடு என்று பெயர். அதற்கு அப்பால் உள்ளது சோழமண்டலம். முக்யமாக சோழ தேசத்திலும், அடுத்தபடி சோழ மண்டலத்திலும் பெரிய கோவில்கள் இருக்கிற மாதிரி வேறு எந்த ப்ரதேசத்திலும் இல்லை. அந்தக் காலங்களில் வித்யாபிவிருத்தி எவ்வளவு மட்டில் இருந்தது, ஜனங்கள் எவ்வளவு க்ஷேமமாய் இருந்தார்கள் என்பதை காட்டக் கூடிய கல்வெட்டு சாஸனங்கள் எங்கே பார்த்தாலும் கோவில் சுவர்களில் எழுதப்பட்டிருக்கின்றன. மற்ற எல்லா ப்ரதேசங்களிலும் காணப்படுகிற சில எழுத்துக்கள் சோழநாட்டு கோவில்களில் இருப்பதில் பாதி கூட ஆகாது. இவ்வளவு கோவில்களை கட்டி வைத்த ஜனங்களுக்கு எவ்வளவு பக்தி இருந்திருக்கவேண்டும்!

காவ்யங்கள் சாஸ்திரங்கள், கலைகள், அந்தக்காலத்தில் எழுதப்பட்ட ஏட்டு சுவடிகள் எவ்வளவு எண்ணிக்கை சோழ நாட்டில் அகப்பட்டிருக்கிறதோ அதில் பாதிகூட மற்ற ப்ரதேசங்களில் கிடையாது. இந்த இரண்டு அடையாளங்களிலிருந்து அந்தக்காலத்து விதயையின் மேன்மையை தெரிந்துகொள்ளலாம். எல்லாக்கலைகளும் உன்னதஸ்திதி அடைந்திருந்தன. மோக்ஷ சாஸ்த்ர பர்யந்தம் எல்லா சாஸ்திரங்களும் மிக பிரசாரம் அடைந்திருந்தன.

அந்த நாளில் பள்ளிக்கூடங்கள் இல்லை யென்று தெரிகிறது. பள்ளி என்ருல் ஜைனர். பள்ளிவாசல் என்பதுகூட அந்த மாதிரி தான் வந்திருக்கிறது. வைதிக மதத்திற்கு வெளிப்பட்டவரான துருஷ்கார்களையும் பள்ளி என்று அழைத்தார்கள். இப்போது மலையாளத்தில், துருஷ்கார்களை 'பௌத்தன்மார்', என்று சொல்லுகிருர்கள். அதாவது, வேறு மதஸ்தராயிருந்தால் அவர்களுக்கு பௌத்தர் என்று பெயர் இட்டுவிட்டார்கள். ஜைனர் காலத்தில் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இப்போது பள்ளிக்கூடம் காலேஜ் இல்லாமல் ஒரு வித்தையும் சொல்லித்தர முடியாது என்று நினைக்கிருர்கள். முதலில் இங்கிலீஷ் படிப்புக்காக ஸ்கூல்கள் ஏற்பட்டன. பிறகு வேதத்துக்கும் சாஸ்த்ரத்துக்கும் வைத்தார்கள். இப்போது ஸங்கீதத்துக்கும் காலேஜ் வைத்திருக்கிருர்கள்

முன்னுளில் ஒரு ஸ்கூலும் இல்லாதபோது எல்லா சாஸ்திரங்களிலும் கலைகளிலும் பெரிய பெரிய வித்வான்கள் உண்டானுர்கள். வித்யையில் ஆசையுள்ளவன் அந்த வித்யை தெரிந்த குருவிடம் போனுன். குரு சொல்லித் தருவதைத்தவிர, குருவின் கிட்ட எப்போதும் இருப்பதால், சிஷ்யன் வித்யை, ஒழுக்கம் இரண்டையும் கற்றுக் கொண்டான். சிஷ்யனுக்கு அந்தே வாசி என்றுபெயர். குரு சுச்ருஷையால், சிஷ்யன் வித்வானுனதோடு குணவானுகவும் ஆனுன். சிஷ்யன பக்தியும் ஸன்மார்க்கமும் உடையவனுக ஆகும்படி குரு செய்தார்.

இவ்வளவு பெரிய கோவில்களைக் கட்டின ஜனங்களுக்கு எவ்வளவு பகவத் பக்தி இருந்திருக்கவேண்டும்? எத்தனை தூரத்திலிருந்து எவ்வளவு பெரிய பாராங்கற்கள் கொண்டு வந்து கட்டியிருக்கிருர்கள்; திருவண்ணுமலை எங்கே, திருவாரூர் எங்கே, ராமேசுவரம் எங்கே! எவ்வளவு சிரத்தை, எவ்வளவு பிடிவாதம்! மனதில் எவ்வளவு ஏகாக்ரியம் அவர்களுக்கு இருந்திருக்கவேண்டும்! இத்தனை கோவில்களுக்கும் எத்தனை மானியங்கள், சொத்துக்கள் விட்டிருக்கிருர்கள்! பழைய கணக்குகள்படி பார்த்தால், கோவில்களுக்கு பாதி, ஜனங்களுக்கு பாதியாக நிலம் இருந்திருக்கும் போல் தோன்றுகிறது. கோவில்களின் கைங்கர்யங்களுக்காக ஆதியில் ஏற்பட்ட ஸர்வமான்யம், இறையிலி, மோஹினி முதலியவைகளைப்பார்த்தால் ஆச்சரியமாயிருக்கும். இதே ப்ரதேசத்தில் அநேக நாயன்மார்கள் ஆழ்வாராதிகள் ஜனித்திருக்கிருர்கள். பல சாஸ்த்ரங்கள், பாஷ்யங்கள் எழுதின பெரிய வித்வான்களும் ஜனித்திருக்கிருர்கள்.

அந்தக்காலத்தில் குருபக்தியுடனும் தெய்வபக்தியுடனும் வித்யாப்யாசம் பண்ணினதால், அவ்வளவு க்ஷேமங்கள் உண்டாயின. எல்லா வித்யைகளும், கலைகளும் சிற்பங்களும் பகவதர்ப்பணமாக உபயோகிக்கப்பட்டன. பகவானுக்காக ஏற்பட்ட இடங்களை பெரிய கட்டடங்களாக அமைத்தார்கள். சிற்ப சாஸ்திரம் அதற்கு உபயோகப்பட்டது. ஆயிரம் வருஷமானுலும் நமது கோவில் கட்டிடங்கள் அசையாமல் இருக்கின்றன. இக்காலம் மாதிரி மனுஷ்யன் வசிப்பதற்கு பெரிய கட்டிடங்களை அவர்கள் கட்டவில்லை. நவரத்நங்களான ஆபரணங்களை பகவானுடைய மூர்ததிக்கு சாத்தினுர்கள். சங்கீத வித்வான்கள் பகவத் சந்நிதியில் பாடி ச்ரேயஸ் அடைய எண்ணினுர்கள். அதேமாதிரி நிருத்யம், வாத்யம் முதலிய எல்லா கலைகளையும் பகவத் கைங்கர்யத்தில் உபயோகித்தார்கள். வேதாத்யயனம் பண்ணின்வர்கள் கோவில்களில் பாராயணம் செய்தார்கள். கோவில்களில் உட்கார்ந்து ஜபம் பண்ணினுர்கள். எல்லாம் பகவதர்ப்பணமாகச் செய்யப்பட்டன.

பெரிய புஷ்பமாலையை பகவானின் மூர்த்திக்கு போட்டு எல்லாரும் இன்பம் அடையலாம்! ஒரு மனுஷ்யனுக்கு மாலைபோட்டால் மற்றவர்களுக்கு போட்டதாகாது. எல்லா ஜீவர்களும் பகவானின் ப்ரதிபிம்பம்போன்றவர்கள். அவருடைய சைதன்யம் தான் உலகம் முழுவதிலும் பிரதிபலிக்கிறது. பகவத் பிரகாசம் இல்லையென்ருல், ஒரு இடத்திலும் பிரகாசம் இல்லை. ஆகாசத்தில் உள்ளஒரு சூர்யன் நிலத்தில் சிதறிக்கிடக்கும் ஆயிரம் நீர்த்திவலைகளில் பிரதிபலிக்கிருன். ஒவ்வொரு திவலையிலும் ஒரு சூரியன் இருப்பதுபோல காணப்படுகிறது. அதுமாதிரி ஒவ்வொரு ஜீவனுக்கும் பகவானிடமிருந்துதான் அறிவாகிய பிரகாசம்கிடைக்கிறது ஒரு கண்ணுடிக்குமுன் நிற்பவனுக்கு மாலைபோட்டால், கண்ணுடிக்குள் பிரதிபிம்பத்திலும் மாலை தெரிகிறது. நாலுபக்கமும் நிலைக்கண்ணுடிகள் அமைத்துள்ள அறைக்குள் ஒருவன் நின்ருல் 50, 60 பிரதிரூபங்கள் கண்ணுடிகளில் தெரியும். அவன் கழுத்தில் மாலை போட்டால், அந்த 50, 60 பிரதிரூபங்களுக்கும் மாலைகள் போட்டாற்போலாகிறது அதேமாதிரி பகவானுக்கு நாம் பக்தியோடு அபிஷேகம் அலங்காரம் செய்தால், சர்வலோகத்துக்கும் க்ஷேமம் கொடுக்கிறது. ஐச்வர்யமோ, வித்யையோ எல்லாம் பகவானுடையது. அவருடைய அனுக்ரஹத்தால் நமக்கு சிறிது கிடைத்திருக்கிறது. அவரிடமிருந்து கிடைத்ததை அவரிடமே சேர்ப்பிக்கவேண்டும் பகவானிடமிருந்துதான் நாம் எல்லோரும் வந்தோம். அவரிடம்தான் நாம் மறுபடியும் போய்ச் சேரவேண்டும் அதுதான் நமது 'வீடு'. மோக்ஷத்துக்கு 'வீடு' என்று பெயர்.

நாம் எந்தக் கார்யம் செய்தாலும், அதை பகவதர்ப்பணமாகச் செய்யும்படி எந்த கல்வி நம்மைச் செய்கிறதோ அது தான் கல்வி. கடைசியாக நாம் பகவானிடம் சேரவேண்டுமென்கிற புத்தியை எது உண்டு பண்ணுகிறதோ அது தான் வித்யை. நாம் ஒவ்வொரு தினமும் காலை முதல் தூங்கப்போகும் வரையில் என்னென்ன செய்கிருேமோ அவைகளை யெல்லாம் ஒரு தரம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவைகளில் எதெது நம்மை பகவானிடம் நெருங்கச்செய்கிறதோ அதெல்லாம் புண்யம். எது நம்மை விலகி எட்டப்போகும்படி செய்யுமோ அது பாபம். தெய்வ பக்தியையும், அதை உண்டுபண்ணக்கூடிய புண்யகார்யங்களைச் செய்யவேண்டுமென்ற புத்தியையும் எந்தப்படிப்பு உண்டுபண்ணுகிறதோ அதுதான் படிப்பு. மேற்சொன்ன அந்தக்காலத்துப் படிப்பால் இதுமாதிரி நல்ல பலன்கள் உண்டாயின. ஆகையால், வித்யையைப்பற்றி பெரியோர்கள் புகழ்ந்திருப்பது சரிதான் என்று சொல்லவேண்டும்.

(தொடரும்)

வால்மீகரும் தமிழும்.

(மதுரை பண்டிட் நாராயண அய்யங்கார் எழுதியது.)

தமிழ் நாடு மாத்திரமின்றி ஆசியா முதலிய ஐந்து கண்டங்களாகத் தத்காலம் வகுக்கப்பட்ட பூலோகமனைத்தையும் முன் காலத்தில் ஆண்டு வந்த மன்னர் அனைவரும் சூரிய வம்சம் அல்லது சந்திர வமிசத்தைச் சேர்ந்தவர்களே. இவ் வமிசத்தினரல்லாத எவரும் முன் காலத்தில் அரசராகவிருந்ததில்லை. குஹன் போன்ற சிலர் ஓர் கூட்டம் அல்லது வகுப்புக்கு அதிபதியாகி ஷை அரசர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தனர். ஆகவே தமிழ் நாட்டில் அரசு புரிந்தவர்களும் சூரிய சந்திர வமிசங்களைச் சேர்ந்தவராகவே இருத்தல் வேண்டும். ராமாயண காலத்திற்கு முந்தி தமிழ் நாட்டை இக்ஷ்வாகு வமிசத்தைச் சேர்ந்த தண்டகன் என்ற அரசன் ஆக்ஷி செய்து வந்து பிறகு சாபத்தால் நாடு அழிந்து காடு ஆகி தண்டகாரண்யம் எனப் பெயர் பெற்றதென்றும், அகஸ்தியர் தென் திசைக்குக் குடி வந்த பிறகு அப் பிரதேசத்தைத் தன் தபோ மஹிமையால் செழிப்புறச் செய்ததாகவும், பிறகு அவ் விடத்தில் பல முனிவர்கள் தவம் செய்து வந்ததாகவும் ராமாயணம் கூறுகின்றது.

உலகத்திலுள்ள ஜனங்கள் அனைவரையும் மனிதர், மனுஷ்யர், மானுஷர், மானிடர், Man என பல பதங்களால் அழைக்கின்றோம். அப்பதங்கள் மனுவின் சம்பந்தத்தைச் சொல்லுகின்றன. மனுவின் சம்பந்தம் பெற்றதால் அனைவரும் மனிதர் எனப்படுகின்றனர். மனு, தேவ இனத்தைச் சேர்ந்தவர். ஆகவே மனுவும் அவர் குமாரரான இக்ஷ்வாகுவும் அவர் ஸந்ததியாரும் தேவ பாஷையான ஸம்ஸ்கிருதத்தைப் பேசி வந்தார்கள் என்பது தான் பொருத்தமுள்ளதாகும். எனவே மனுவின் சம்பந்தம் பெற்ற மனிதர்களும் அப் பாஷை பேசி வந்தார்களானதால் மனுஷிய பாஷை ஸம்ஸ்கிருதமேயாகும். यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै என்ற உபநிஷத் வாக்யம் மகாப்பிரளயத்திற்குப் பிறகு பிரபஞ்ச சிருஷ்டி காலத்தில் முதலில் நான்முகனைப்படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசித்தார் எனக் கூறுகின்றது. இவ் வசனத்தால் வேத பாஷை பிரளயகாலத்திலும் அழியவில்லை என்றும் முதல் சிருஷ்டியான பிரும்மாவுக்கு அப்பாஷை சொல்லிக் கொடுப்பட்டதென்றும் பிறகு அவர் மூலமாக உலகில் பரவிற்று என்றும் விசதமாகிறது.

இவ்வழியாத்தன்மையும் பிரம்மா முதல் துடர்ந்த உபதேசக்கிரமத்தால் பரவும் தன்மையும் மற்ற எந்த பாஷைக்காவது உண்டென்று ஒரு ஆதாரமும் காட்ட முடியாது. இப்பெருமையை ஸம்ஸ்கிருதம் ஒன்று தான் அமையப் பெற்றுள்ளது. स भूरिति व्याहरत। भुवमसृजत। என்ற உபநிஷத் வாக்யமும் वेदशब्देभ्य एवादौ என்ற புராண வசனமும் பிரம்மா பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கும் பொழுது வேதத்திலுள்ள சப்தங்களைக்கொண்டு முன் யுகம் போல் வஸ்துக்களை சிருஷ்டித்து பெயர்களையுமிட்டார் என்பதால் பிரபஞ்சத்திலுள்ள ஸகல வஸ்துக்களுக்கும் முதலில் வேத பாஷையான ஸம்ஸ்கிருதத்திலேயே பெயர் கொடுக்கப்பட்டதென்பது நிரூபணமாகிறது.

एतत् साम गायन्नास्ते। हा उ हा उ हा उ என்ற உபநிஷத்வாக்யம் முக்தர்களும் வேத பாஷை பேசுவதாகக் கூறுகின்றது.

மஹா பாஷ்யத்தில் முதல் ஆன்ஹிகத்தில் அடியிற்கண்ட வாக்யங்கள் காணப்படுகின்றன.

அவைகளின் பொருள் ["ஸம்ஸ்கிருதவியாகாண நீதியாக ஸித்திக்கும் பல பதங்கள் உலகத்தில் தத்காலம் வழக்கத்தில் இல்லாமல் இருக்கின்றன. ஆகையால் அப் பதங்களுக்கு இலக்கணம் வேண்டிய அவசியமில்லாமலிருப்பதால் அவைகளைத் தள்ளிவிடலாம் என்ற ஓர் கேழ்வி உதிக்கின்றது.

இதற்கு பதில் தத்காலம் பல பதங்கள் வழக்கத்தில் இல்லாவிட்டாலும் இதற்கு முந்தின காலங்களில் அவை வழக்கத்திலிருப்பதால் அவைகளின் இலக்கணங்களையும் சொல்லவேண்டியது அவசியமாகும். நூறு வருஷம் ஆயிரம் வருஷங்களில் அனுஷ்டிக்கப்படவேண்டிய தீர்க்க ஸத்ரங்களென்ற சில யாகங்கள் வேதங்களில் காணப்படுகின்றன. அவைகளை தத்காலம் அனுஷ்டிப்பார் இல்லை. அவ்விதமிருந்தும் அந்த யாகங்களின் பிரக்ரியைகளை நூல்கள் கூறுகின்றன. பிரகிருதத்திலும் அது பொருந்தும். மேலும் நம் தேசத்தில் அப்பதங்கள் உபயோகத்தில் இல்லாவிட்டாலும் அவைகள் வேறு தேசங்களில் (கண்டங்களில்) உபயோகத்தில் இருக்கின்றன. எனக்குத் தெரியவில்லையே? எனில் தெரிந்து கொள்ள நீ முயற்சி செய். அப்பதங்கள் வழக்கத்திலிருக்கும் தேசங்கள்தான் எவை? எனில் தெரிந்துகொள்ள நீ முயற்சி செய். அப்பதங்கள் வழக்கத்தில் இருக்கும் தேசங்கள்தான் எவை? எனில் 3 ஏழுத்வீபங்கள் கொண்ட பூலோகம்,(தத்காலம் ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்ட பூலோகத்தை நமது பூர்விகர்கள் ஏழு த்வீபங்கள் கொண்டதாக வகுத்து நாம் வசிக்கும் இந்தியாவை ஜம்பூத்வீபத்தில் ஓர் சிறிய பாகமெனக் கூறியுள்ளார்கள்.) மூன்று உலகங்கள் (பூலோகம், பாதாள லோகம், தேவ லோகம் என்பது மூன்று உலகமாகும். மூவுலகங்களில் பூலோகமும் அடங்கியிருந்தும் ஸப்தத்வீபா வஸுமதீ என்று மறுபடியும் தனித்துக் கூறியிருப்பது பூலோகம் என்றால் ஓர் குறுகிய பிரதேசம் என்று சந்தேகமேற்படாவண்ணம் வியாக்யான ரூபமாக ஏழுத்வீபங்களுடன் கூடியது என்று தனித்துச்சொல்லப்பட்டது.) ஆகியவைகளே. அப்பதங்களைக் கொண்ட நூல்களோவெனில்— நான்கு வேதங்கள், அதன் அங்கங்கள், உபநிஷத்துக்கள், 101 யஜுஸ்சாகைகள் ஆயிரம் ஸாமசாகைகள், 21 ருக்சாகைகள், ஒன்பது அதர்வணசாகைகள், வாகோவாக்யம், இதிஹாஸம், புராணம், வைத்ய நூல், ஆகிய இவைகளே. இவ்வளவு தேசங்களில் இவ்வளவு நூல்களில் வழக்கத்திலும் பிரயோகத்திலுமுள்ள பதங்களைப் பூர்ணமாக அறியாமலேயே "சில பதங்கள் வழக்கத்திலில்லை" என்று சொல்லுவது ஸாஹஸமே. சில தேசங்களில் சில பதங்கள் சில அர்த்தங்களில் குறிப்பாகப் பிரயோகிக்கப்படுகின்றன. எவ்விதமெனில்—शव என்ற வார்த்தை 'நடை' என்ற அர்த்தத்தில் காம்போஜ தேசத்தினர் வழங்குகின்றனர். ஆனால் ஆரியர் அவ்வார்த்தையை பிணம் என்ற அர்த்தத்தில் உபயோகிக்கின்றனர். ஸௌராஷ்டிர தேசத்தில் हम्म என்ற வார்த்தையும் கிழ்தேசத்தினரும் மத்ய தேசத்தினரும் रंह வார்த்தையையும் நடை என்ற அர்த்தத்தில் உபயோகிக்கின்றனர். ஆனால் ஆரியர் गम என்ற வார்த்தையை நடை என்ற அர்த்தத்தில் உபயோகிக்கின்றனர்."]

இந்த மஹா பாஷ்ய வசனங்கள் தமிழ் நாடு அடங்கிய பூலோகம் முழுவதும் அதாவது ஆசியா முதலிய ஐந்து க்ண்டங்களிலும் ஸம்ஸ்கிருதமே பேசும் பாஷையென்றும் தேவலோகங்களிலும் இது தான் பேசும் பாஷையென்றும் ஸ்பஷ்டமாகக் கூறுகின்றன. ஹிமாலயத்திற்கும் விந்தியத்திற்கும் நடுவிலுள்ள பூமியில் வசிப்பவர் ஆரியர் எனக்கூறப்படுவது அனுசிதமாகும். காம்போஜம் முதலிய முன் சொன்ன தேசங்களில் பொதுமக்கள் ஸம்ஸ்கிருத வார்த்தைகளை ஓர் அர்த்தத்தில் பாஷிப்பது வாடிக்கையென்றும் ஆனால் அவ்விடத்திலுள்ள ஆர்யர்கள் வேறு அர்தத்தில் உபயோகிப்பது வழக்கமெனவும் கூறப்பட்டிருப்பதால் ஆரியர் என்ற பதம் பெரியோர் எனப்பொருள் கொடுப்பதாகும். ஆரியர் என்ற சொல் ஓர்வகுப்பு அல்லது இனத்தைக் குறிப்பதாக நிகண்டு..ிகளும் பிரயோகத்திலும் காண முடியாது. ஸம்ஸ்கிருத பாஷை ஆரியர் பாஷையென்றும் அவர்கள் வேறு தேசத்திலிருந்து வந்தார்களென்றும் கூறுவதற்குச் சற்றும் ஆதாரம் கிடையாது. காவேரி நதியின் தெற்குக்கரையிலுள்ள ஓர் நகரம் शिबि என்ற பெயருள்ளதாகவும் அதை அரசாக்ஷி செய்த அரசன் शिबिஎன்றும் அவன் வமிசத்தினர் शैब्यர் என்றும் இச்சொல்லே தமிழில் செம்பியர் எனமாற்றிற்று என்றும் இவ்விதம் தமிழ் நாட்டில் நகரம் அரசன் அவன் வமிசத்தினர், இவர்களைச் சொல்லும் பதம் ஸம்ஸ்கிருதபதமென்றும் நமது ஆரர்ய்ச்சியாளர் (கியாகமறதியால்) ஒப்புக்கொண்டிருப்பதால் தமிழ் நாட்டில் ஸம்ஸ்கிருதமே முதல் பாஷையாகவும் பேசும் பாஷையாகவும் இருந்ததெனமுடிகின்றது.

கீதோபதேச விமர்சம்.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ரும் ப்ராக்ஞ்விருத்த வாதமென்றே வ்யாக்யானம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

துரியோதனாதியர்களிடம் கருணை காட்டியது மாத்திரம் சாஸ்திர விருத்தமானதாயினும் ஆசார்யர்களான பீஷ்ம துரோணர்களிடமும் புத்திரன் போன்ற மற்றவர்களிடமும் கருணை காட்டியது சாஸ்திர ஸம்மதமானதல்லவா என்று கேட்கலாம். அவர்கள் ஆசார்யர்க்ளாயினும் புத்திரர்களாயினும் பகவத் துவேஷிகளான துரியோதனாதியர்களைச் சார்ந்ததே அவர்களின் நிக்ரஹத்திற்குக் காரணமாகும். காகாசுரன் பகவானிடம் அபசாரம் செய்ததால் தகப்பனான இந்திரனாலும் கைவிடப்பட்டான். சங்கராம்சான தூர்வாஸர் பகவத் பக்தனான அம்பரீஷனிடம் அபசாரம் செய்ததால் சங்கரரால் கைவிடப்பட்டார். பகவத் துவேஷிகளும் பகவத்துவேஷிகளைச் சார்ந்திருப்பதும் நிக்ரஹத்திற்கு முக்கியகாரணமே தவிர ஆசார்யன் புத்திரன் என்ற ஸம்பந்தம் காரணமாகாது. மேலும் என்னாலேயே அவர்கள் ஏற்கனவே கொல்லப்பட்டிருக்கிறார்கள். நீ நிமித்தமாத்திரனாக இரு என்று ஸ்ரீ கிருஷ்ணரும் உபதேசிக்கப் போகிறார். இதனாலும் அர்ஜுனனின் வாதம் புத்திமானுடைய வாதமாகாது என்று அறிய வேண்டும்.

சுலோகத்தின் பிற்பாதியிலுள்ள கதாஸூன் என்ற பதத்திற்கு இறந்தவர்கள் என்ற அர்த்தமாயினும் அச்சமயத்தில் பீஷ்மாதிகள் இறக்கவில்லையாதலால் ஸமீபித்த மரண முடையவர்கள் என்று அர்த்தம் கொள்ள வேண்டும். 1—9 சுலோகத்திலுள்ள த்யக்த ஜிவிதாஹ என்ற பதத்திற்கும் உயிரை விடத்தீர்மானித்தவர்கள் என்ற அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. உயிரைவிட்டவர்கள் என்றல்ல. ஆகவே பிற்பாதியின் அர்த்தமாவது:— பண்டிதர்கள் உயிருடன் இருப்பவர்களைக் குறித்து எப்படி துக்கிப்பதில்லையோ அப்படியே மரணம் சமீபித்தவர்களைக் குறித்தும் துக்கப்படுவதில்லை, பூர்வார்த்தத்திலுள்ள 'ச' என்பது ஸ்ரீசங்கர பாஷ்யத்தின்படி விரோதார்த்த முள்ளது. ஸ்ரீமத்வ பாஷ்யத்தின்படி ஸமுச்சயார்த்த முள்ளது. உத்தரார்த்தத்திலுள்ள 'ச' என்பது ஸ்ரீ சங்கர பாஷ்யப்படி ஸமுச்சயார்த்தமுள்ளது. ஸ்ரீமத்வ பாஷ்யப்படி உபமானார்த்த முள்ளது.

தைப்பூசம்.

(மேலக்காவேரி சிரோமணி
கே, ஆர், வைத்தியநாத சாஸ்திரி எழுதியது.)

பூச நட்சத்திரத்துடன் அநேகமாய் கூடி வரும் பௌர்ணமியைப் பிரதானமாய்க் கொண்ட இம்மாதம் பௌஷமாதமெனப்படும். பூச நக்ஷத்திரத்திற்கு தேவதை ப்ருஹஸ்பதி இந்நக்ஷத்திரத்துடன் கூடிய பௌர்ணமி அதிக விசேஷ பலனைக்கொடுக்கக்கூடியது. ஸாதாரணமாகவே பௌர்ணமி தினம் தேவகார்யத்திற்கு மிகவும் யோக்யமானது. தவிரவும் புஷ்யபூர்ணிமை ருத்ரமூர்த்தியின் ஸ்வரூபமாகையால் அன்று ஈச்வரனுக்கு விசேஷமாய் அபிஷேகம் பூஜை இதுகள் செய்யவேண்டும். இது முதல் ஆறுமாதகாலமாகிய உத்திராயணம் தேவர்களுக்குப் பகற்காலமெனக் கூறப்படுகிறது. இக்காலத்தில் இம்மாதம் முற்பகலில் முதற்காலமாதல்பற்றி தேவர்கள் எழுந்து நல்ல ஊக்கத்துடனும் ஸந்தோஷத்துடனும் அநேக நற்கர்மாக்களைச் செய்து உலகிலுள்ள ஆன்மகோடிகளுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணி ஒவ்வொருவரும் பெருமை பெறவேண்டுமெனப் பேராவல் கொண்டு அநுக்ரஹம் செய்ய முயற்சியுடனிருக்கும் தருணமாதலால் இம்மாதம் ஸ்நானம் தானம், ஜபம் முதலிய நற்கர்மாக்களைச் செய்ய மிகவும் முக்யமென விதிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதம் சுக்ல பஞ்சமீ முதல் 10நாள் விருதமிருந்து மாதமுழுவதும் வ்ரதமனுஷ்டித்த பலனை அடைகிறான் தினந்தோறும் விடியற்காலத்தில் புண்யதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அங்குள்ள சிவக்ஷேத்திரத்தில் விளங்கும் ஈச்வரனை பூஜித்துக் கடைசியாக ஆயில்ய நக்ஷத்திரத்தில் விசேஷமாய்த் தானம் செய்து வ்ரதத்தை முடிக்கவேண்டும். இவ்வாறு செய்பவர் நலம் பெறுவர். மனோரதங்களையெல்லாம் எளிதில் பெற்று வெகுகாலம் வாழ்வர்.

முன்பு த்வாபரயுகக் கடைசியில் சோழநாட்டில் ஹம்ஸத்வஜன் என்ற அரசனிருந்தார் அவர் மிக தர்மிஷ்டர் ஒரு சமயம் கங்கை, காசி, பிரயாகை, முதலியவைகளின் பெருமையைக்கேட்டு தான் காசியாத்திரை செய்ய எண்ணி சென்றால் பிரஜாபரிபாலனம் குன்றிவிடுமென்று எண்ணி முடிவில் ஒரு ப்ராமணர் மூலம் அப்பயனை அடையலாமென தீர்மானித்து சாஸ்திர முறைப்படி அதற்குறிய ஒரு பெரியாரை வேண்டினார். அந்த பிராமணர் வீட்டில் பெரியோர்கள் ஒருவருமில்லை. புதிதாக விவாஹம் செய்து கொண்ட மனைவியும் தானுமே இருப்பதால் அப்பெண்ணை விட்டுச்செல்ல மனமில்லை என்றார். அரசர் அவரது விருப்பத்திற்கு அதிகமாக திரவியத்தைக் கொடுத்து மிக ஜாக்ரதையாய் இருக்க சொல்லி அதற்குடன் படுத்தி அனுப்பினார். அவரும் கிடைத்த பொருளை மனைவியிடம் கொடுத்து ஜாக்ரதையாய் இருக்கச்செய்து காசி சென்று கங்கையில் நீராடிவிட்டு கங்காஜலம் எடுத்துக்கொண்டு திரும்பிவந்தார். வந்தசமயம் இரவாகவிருந்ததால் அரசனைப்பார்ப்பது உசிதமல்லவென எண்ணி தன் வீட்டில் அரசன் பாதுகாப்பு எப்படி இருக்கிறது என அறிய தனது வீட்டிற்குச் சென்றார். பதிவிருதையான மனைவி வெகு ஸந்தோஷத்தோடு உல்லாஸமாய் பேசிக்கொண்டிருக்குங்கால். அரசன் நகர சோதனைக்கு வந்தசமயம் காசிக்கு அனுப்பிய பிராமணன் தன் மனைவி பக்கத்தில் நின்று புருஷர் குரலைக்கேட்டு ஓ இது பிராமணரிடம் சொல்லியதற்கு விரோதமாகுமே என்று வேகமாய்ச்சென்று அப் புருஷனை வேறு மனிதன் என்று எண்ணி வேகமாய்ச் சென்று கையிலுள்ள கத்தியால் தலையை உடலிலிருந்து தனிமையாய் செய்துவிட்டான்.

திடீரென இச்செயலைக் கண்ட மனைவி இப்பொழுதுதானே எனதுகணவர் வந்தார். அரசரையும் காணவில்லையே கங்கா தீர்த்தமும் கொடுக்கவில்லையே என புலம்ப அதைக்கண்டு வருத்தமுண்ட அரசன் மந்திரிகள் மூலம தனது அடாத செயலை மன்னிக்கும்படி பலவாறு வேண்ட அவளும் கங்கா ஸ்நானத்தால் ஸ்வர்க மடைந்த பதியை பதிபக்தியால் அடைந்து திவ்ய சுகங்களை பெற்றாள்.

அரசனோ மதிமயங்கி நடுநடுங்கி வெகு துக்கத்துடன் நிற்க கருத்தநிறம் பெருத்த உடல், பருத்த வயறு நீண்டபல் சிவந்த கண் உள்ள ஹிமயமலை போன்ற பிரும்மஹத்தியானது பிடித்துக்கொண்டது பிறகு அரசன் இரவு பகலாக உணவில்லாமல் தூக்கமில்லாமல் அலைந்து பரிதவித்து நிற்க பூர்வ புண்யவசத்தால் பார்கவ முனிவரைக் கண்டு அவரதுகருணையால் தீர்த்தயாத்திரை செய்து பூப்ரதக்ஷிணம் வந்தான். பூமியிலுள்ள பல ஸ்தலங்களை தரிசித்து ஜீர்ணோத்தாரணம் செய்து பல பிரும்மணர்களுக்கு பசு, பூமி முதலிய தானம் செய்தும் போகாமலிருக்க கிரமமாய் ஸ்ரீசைலம், கோர்கணம், கேதாரம், காசி, மதுரை, வேதாரண்யம், சாயாவனம் முதலிய அனேக ஸ்தலங்களை தரிசித்து காவேரியில் ஸ்நானம் செய்து மத்யார்ஜுனம் க்ஷேத்திரம் என்னும் திருவடமருதூர் வந்தான். அங்குள்ள பிராமணர்களால் அதன் மஹிமையைக் கேட்டு ஸித்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விதிப்படி தர்ப்பணாதிகளைச் செய்து பயம் நீங்கி பகவானை தர்சித்து கொஞ்சம் குண மடைந்தான்.

ச்ரத்தையுடன் ஸ்தலமகிமையைக் கேட்டு அதன்படி சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து தை-மீ ஈச்வரனுடைய புஷ்யஉத்ஸவத்தை சிரத்தையுடன் ஸேவித்து ஆலயத்தில் மஹாதேவனை தெர்சிக்க அப்பிரும்மஹத்தி வெளிகோபுரத்தில் பக்கத்தில் விலகி நின்றது. இவ்வாறு நீங்கி மிகவும் சந்தோஷ முள்ளவனும் மனைவி, புதல்வர், மந்திரி முதலிய பரிவாரங்களுடன் ஈசனுக்கு பூஜை செய்து ராஜ்யம் ஸேனை இவைகளில் பாதி தானம் செய்து பிரதி வருஷமும் இந்த தைப்பூசம் நடக்கும்படி ஏற்படுத்தி பிறகு அரசு புரிந்து வெகுகாலம் வாழ்ந்தான்.

தைப்பூசம் உத்ஸவம் திருவடமருதூரில் (தஞ்சை ஜில்லாவில்) விசேஷமாய் நடைபெறுகிறது. காவேரியில் பௌஷ்ய ஸ்நானம் செய்து போஜனம் மிதமாய் புஜித்து பில்வ விருக்ஷத்தை ப்ரதக்ஷிணம் செய்து அதனால் பூப்ரபதக்ஷிணம் செய்தபலனை அடையலாம். இங்கே அச்மேதப்ரதக்ஷிணம் எனப்ராகாரம் ஒன்றுண்டு. அதை முன்பு வஸுமான் என்ற விதேஹ தேசத்தரசன் ஜாபாலி முனிவரின் உபதேசத்தால் ச்ரத்தையுடன் கட்டி முடித்தான். அதன் மூலம் சத்ருக்களை வென்றான். இக்காலத்திலும் அச்வேத பிரதக்ஷணம் செய்து பலர் இஷ்டசித்தியைப் பெறுகின்றனர். இவ்வாறு நியமத்துடன் தை சுக்ல பஞ்சமி முதல் பௌர்ணமீ முடிய தினந்தோறும் ஸ்வாமி தர்சனம் செய்து 10-2-41 திங்கள்கிழமை புஷ்ய நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்வாமியை தரிசித்து தனது மனோரதங்களையெல்லாம் எளிதில்பெற்று ஸுகமாய் வெகுகாலம் வாழவேண்டுமென பக்தர்களை வேண்டுகிறேன். சுபம்! சுபம்!!

மதிப்புரை.

ஸ்ரீவரவரமுனீந்த்ர க்ரந்தமாலா.

ஸ்ரீ உபயவே ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் பாண்டித்யமும், மற்றவர்களால் செய்யமுடியாத அஸாதாரணமான ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரவசந ப்ரகாசந கைங்கர்யமும் அதிப்ரஸித்தங்களானவை. அவர் பால்யம் முதல் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் எங்கும் பரவப் பலவழிகளிலும் பாடுபட்டுவருவதை அறியாதாரோ, பாராட்டாதாரோ கிடையாதென்பது திண்ணம். முதலில் ஸ்ரீ ராமாநுஜக்ரந்தமாலை இந்த ஸ்வாமியால் வெளியிடப்பட்டுவிட்டது. ஸ்ரீதேசிக க்ரந்தமாலையை (நாகரலிபி) ஆரம்பித்து இந்த ஸ்வாமி பல க்ரந்தங்களை வெளியிட்டிருக்கிறார். மாலை இன்னும் சில மாதங்களுக்குள் முடிவுபெறலாம். இப்பொழுது ஸ்ரீ வரவரமுனிகள் என்னும் ஸ்ரீ மணவாளமாமுனிகள் க்ரந்தமாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாலையின் இரண்டு ஸஞ்சிகைகள் நமது பார்வைக்கு வந்திருக்கின்றன ஒவ்வொரு ஸஞ்சிகையும் 120 பக்கங்கள் கொண்டது. முதல் 40 பக்கங்களில் திருவாய்மொழியின் வியாக்யாநமான ஈடு முப்பத்தாராயிரப்படியும் பாக்கி 80 பக்கங்களில் ஸ்ரீமாமுனி க்ரந்தங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இரு க்ரந்தங்களும் ப்ரஸித்திபெற்ற ப்ராசீன க்ரந்தங்களாகையால், அவைகளைப்பற்றி புதிதாகாக ஒன்றும் சொல்ல இடமில்லை. இவைகள் பல தடவைப் பலராலும் (தமிழ் தெலுங்குலிபி) பதிப்பிக்கப்பெற்றிருந்தாலும், ஸ்ரீ அண்ணங்கராசார் ஸ்வாமியின் பதிப்பில், சுத்தமான பாடம், பிழையில்லாமை, முதலிய பல குணங்களையும் யாவரும் எதிர்பார்க்கலாம். ஸ்ரீ மாமுனிகளின் க்ரந்தங்களுள் இப்பொழுது வெளிவருகிறது 'ரஹஸ்ய வ்யாக்யான பாகம்' பெரிய ஸைஸ் நல்ல உயர்ந்த பேபர், நக்ஷத்ரம் போன்ற பெரிய தெலுங்குலிபி சஞ்சிகை ஒன்றுக்கு விலை ஒரு ரூபாய். மொத்தமாக ஒரே தடவையில் 10 ரூ கொடுத்தால் இந்தமாலை முழுவதுமே கிடைக்கும். அபேக்ஷையுள்ளவர்கள் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தசபா கார்யாலயம் அண்ட் கம்பெனி சின்னதம்பி முதலித்தெரு ஜி டி சென்னை என்கிறவிலாசத்துக்கு எழுதவேணும்.

ஆர். வி. கே.

செட்டிநாட்டில்
ஸ்ரீ ஆவணி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ ஆவணி மடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் இப்பகுதியில் ஒரு வருஷகாலமாய் சுற்றுப்பிரயாணம் செய்து தற்காலம் தேவகோட்டையில் விஜயம் செய்துள்ளார்கள். பக்தகோடிகள் பாதபூஜை பிக்ஷைகள்செய்தும் காணிக்கைகள் செலுத்தியும் கடமையை நிறைவேற்றுகின்றனர். ஸ்ரீ சாரதாம்பாள்சமேத ஸ்ரீசந்திரமௌளீச்வரர் பூஜாவைபவத்தைக்கண்டு பக்தகோடிகள் இம்மை மறுமைப்பயனை எய்துகின்றனர். சென்ற இடங்களில் ஸ்ரீ ஸ்வாமிகள் உபந்யாஸோபதேச மூலம் மக்களிடையே ஆஸ்திகத்தைப் பரப்பிவருகின்றார்கள்.

ந. நி.

லலிதாத்ரிசதீ

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும் விலை ரூ. 0—3—0.
ஷை பாஷ்யம் ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிருர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்



கதம்பம்
அல்லது
பார்வதி=கல்யாணம்

S. K. விச்வேச்வர சாஸ்திரிகள் மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர்

(முன் தொடர்ச்சி)

உடனே சுந்தரய்யர், எழுந்து பையன் வந்தானே அவனுடன் பேசினுயா ? என்று கேட்பவர் போல், லட்சுமியை உள்ளே அழைத்துப்போய், இருவரையும் கல்யாணம் செய்து பார்க்கவேண்டும் என்று இருக்கு எனக்கு, நீ என்ன சொல்கிருய், என்று கேட்க அதற்கு, லட்சுமி, எனக்கும் அப்படித்தான் இருந்தது ஆனுல் சொல்லத் துணியவில்லை, நீங்கள் என்ன சொல்லு வேளோன்னு: இப்படி உள்ளே இவர்கள் பேசுகையில், சங்கரரும் குழந்தை பார்வதி என்றழைத்து (அவளும் சற்றுகிட்ட வர,) நான் தான் உன் அப்பா, ஆனுல் உன்னை வளர்த்தவர்கள் அவர்கள் இருவருமே: தெரிந்து கொண்டாயா இப்போ என்ருர். எல்லாம் அம்மா சொன்னுள் என்ருள் பார்வதி.

சுந்தரய்யர் தன் இடத்திற்கு வந்து என்ன சங்கரா, பார்வதிகல்யாணம் நடத்திப்பார்க்க வேண்டாமா என்ருர் இருச்சொல் அலங்காரமாய்; கொஞ்சம் எதையோ, யோசித்துக்கொண்டிருந்த சங்கரர், கதைக்குப் பாகவதர் யார் என்ருர்? என்ன சங்கரா, புத்தி கதைகேட்கவா போகிறது, நன்ருயிருக்கு என்றவுடன், தன் நினைவு வந்து என்ன உன்னிஷ்டம் போல் எதுவும் நடக்கட்டும். உன்னிடம் பெண்ணை உத்தேசித்து ஜாதகம் வந்திருக்குமே என்ருர். என்ன சங்கரா வெண்ணையைவைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போல் இருக்கே நீ சொல்கிறது. பால்யம் முதல் இணைபிரியாத் தோழர்களாய் நாமிருந்து வருவது போல், இவர்கள் இருவரும் தம்பதிகளாய் வாழ்ந்து கொண்டிருக்கட்டுமே. அதற்குவேண்டியதைச் செய்வோம் என்ருர். சரி ததாஸ்து என்ருர் சாஸ்திரிகள். அப்பா கல்யாணம், உனக்குக்கல்யாணம் பண்ணிப்பார்க்க வேண்டும் என்றிருக்கிறது எனக்கு. என் சினேகிதர் பெண், இப்பார்வதியைத்தான் ஏற்பாடு செய்திருக்கிறேன் எனவே, பார்வதியும் கல்யாணமும் சற்று சங்கோசமும் (அக்கால இயற்கைபோல்,) காட்டினுர்கள். உள்ளுக்குள் பூரிப்பு. சுந்தரய்யர் தன் டிவிஷனுக்குப்போய் ஒருமாத லீவ் எடுத்துக் கொண்டுவந்தார். கூடியமட்டும், இக்கல்யாணத்தில் சங்கர சாஸ்திரிகளுக்கு உதவியாய் இருக்கவேண்டும் என்ற நோக்கம் நல்லமுகூர்த்தம் உத்தராயணத்திலேயேஏற்பாடு செய்து, சுந்தரய்யர் சாஸ்திரிகள் தங்கள் தங்கள் முக்ய சினேகிதர்களுக்கும், பந்துக்களுக்கும் பத்திரிகைகள் மூலமாய் தெரிவித்தார்கள். கல்யாணம் செய்ய நினைத்தவுடனே, சங்கரர், தன் வருஷாசன மிராசுதார்களுக்கும் நேர ஆள்விட்டார் பத்திரிகை அனுப்புவதற்கு முன்னுல் நேரக் கல்யாணஞ்சொல்ல வேண்டியவர்களுக்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கல்யாணத்திற்கு 20 நாள் முந்தியே பெரிய மிராசுதார்கள் (வருஷாசனம் கொடுத்து வந்தவர்கள்) ஒன்ருய்க் கூடி இந்த 4 நாள் கல்யாணத்தை வெகு விமரிசையாய் நடத்திவைக்கவேண்டுமென்று, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தங்களுக்குள்ளேயே பங்கு போட்டுக் கொண்டு முன்னுல், விஷயங்களைச் சங்கரசாஸ்திரிகளுக்கு அறிவித்தார்கள். அவர்கள் இஷ்டப்படி செய்ய சங்கரர் சம்மதித்தார். நான்கு நாள் கல்யாணம். தினம் இரு வேளையும் எல்லாருக்கும் சம்பிரமமான சாப்பாடு. குண்டு நாராயணய்யர் சமையல். ஊர்கோலம், ஔபாஸனம் இரண்டு வேளையும் உண்டு. அப்படியே ஊஞ்சல் இருவேளையும். நலங்கு ஒருவேளை உண்டு.

சுந்தரய்யர், எதிர் ஜாமீன் வாங்காமல் பார்வதிக்கு வேண்டிய நகைகளெல்லாம் போட்டார். முக்ய பந்துக்களுக்குத் தக்கபடி உயர்ந்த வேஷ்டி புடவைகளுடன். சிப்பந்தி ஆள்களுக்கும் சோமன், பாலாமணி சீட்டிப்புடவை கொடுபட்டன. சம்மந்திகளும் ப்ரஸ்பரமரியாதைகளை நன்ருய் நடத்தினுர்கள்.

சங்கர சாஸ்திரிகள் கன்னிகா தானத்தோடு, ஒரு வேலி பூதானம், கோதானம் மாப்பிள்ளைக்கு 1000 ரூபாய் வரையிலும் நகை வகையராவுக்கும் செலவு செய்து கொடுத்தார். கல்யாணத்திற்கென்று போட்ட அழகிய கொட்டாய்ப் பந்தலில் ஒழிந்த நேரமெல்லாம் பெரிய மிராசுதார்கள் மேல் பார்வையில் ஒரு மணிக்குக் குறையாமல் தினம் பல கச்சேரிகள் நடைபெறும்.

(தொடரும்)

நாகையில் கண்டனக் கூட்டம்

நாகபட்டிணம் ஸ்ரீ ஆசார்ய கைங்கர்ய ஸபாவின் ஆதரவில் (2-2-41) ஞாயிற்றுக்கிழமை மாலை $6\frac{1}{2}$ மணிக்கு திருவாதி சம்ஸ்கிருத காலேஜ் சம்பந்தமாக தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் பொர்டாரால் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களை கண்டிப்பதற்காக ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் ஸநாதனிகளின் கூட்டம் நடைபெற்றது.

பிரம்மஸ்ரீ ந.ராமஸாமி சாஸ்திரிகள் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள்.

அடியில் கண்ட தீர்மானமானது ஸபாவின் காரியதரிசி ஸ்ரீ ந.சாம்பசிவய்யர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு வக்கீல்குமாஸ்தா ஸ்ரீ R. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது,

“திருவாதி ஸம்ஸ்கிருதகாலேஜில் ஸாஹித்ய வகுப்பை எடுத்தும்; ஸமபந்தி போஜனம் செய்ய வேண்டு மென்று தஞ்சை ஜில்லா போர்டாரால் தீர்மானிக்கப்பட்டதை இக்கூட்டம் கண்டிப்பதுடன் அத்தீர்மானமானது முதலில் அதை ஸ்தாபித்தவர்களுடைய அபிப்ராயத்திற்கு விருத்தமானதென்றும், வர்ணுச்ர தர்ம தத்வங்களுக்கு விரோதமான தென்றும் ஆகையால் அத்தீர்மானத்தை மாற்ற வேண்டு மென்று இம்மீடிங் கேட்டு கொள்ளுகிறது.”

இந்த தீர்மானத்தை பிரேரேபித்துப்பேசியதில் ஸ்ரீ ந. சாம்பசிவ அய்யர் தஞ்சாவூர் ராஜாக்களால் ஸம்ஸ்கிருத பாஷையின் அபிவிருத்திக்காக காலேஜானது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிற ஸ்திதியில் அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு விரோதமாக ஏற்பாடுகள் செய்ய போர்டாருக்கு எவ்விதபாத்தியமும் இல்லையென்றும் முதல் முதலாக ஸம்ஸ்கிருத பாஷையின் கௌரவத்தை குறைக்க பலவிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்திருப்பதாகவும் இப்பால் வர்ணுச்ரம தர்மத்தையே ஒழிக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் சமபங்க்தி போஜனம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் ஸநாதன தர்மத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு மனதிற்கு மிகுதியான தாபத்தை உண்டாக்கக்கூடிய இந்த தீர்மானத்தை உடனே ரத்து செய்யவேண்டியது அவச்யமென்றும் வற்புறுத்திப் பேசினுர்கள். ஏகமனதாக தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

ந. நி.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.